# கந்தரலங்காரம்

கந்தர் சஷ்டி கவசம்

சத்துரு சங்கார வேற்பதிகம்

(முதலியன.)

மானேஜர்:

**லக்ஷ்மி ஆபீஸ்,**

தபால் பெட்டி 99,

சென்னை.

1924 [விலை அணா 4.

28 MAY 1924

Q26:417
N24
225589

# நார்மடி வேஷ்

இந்த "நார்மடிகளை" தினப்படி மடிக்குப் பதிலாகவும் வைதிக கர்மம் நடத்தும் போதும் அணிந்து கொள்ளலாம். இது தினப்படி நனைத்துக் கொள்வதிலும் யாதொரு கெடுதியும் ஏற்படாது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | கெஜம் | 34 | இஞ்ச | விலை | ரூ. | 3 | முதல் | 3½ வரை. |
| 2½ | ,, | 44 | ,, | ,, | ,, | 5 | ,, | 6½ ,, |
| 3 | ,, | 44 | ,, | ,, | ,, | 6 | ,, | 8 ,, |
| 3 | ,, | 50 | ,, | ,, | ,, | 7 | ,, | 8½ ,, |
| 3½ | ,, | 44 | ,, | ,, | ,, | 7 | ,, | 9 ,, |
| 3½ | ,, | 48 | ,, | ,, | ,, | 8 | ,, | 10 ,, |
| 4 | ,, | 44 | ,, | ,, | ,, | 7 | ,, | 12 ,, |
| 4½ | ,, | 50 | ,, | ,, | ,, | 10 | ,, | 13 ,, |
| 4 | ,, | 48 | ,, | ,, | ,, | 9 | ,, | 12 ,, |
| 5 | ,, | 50 | ,, | ,, | ,, | 12 | ,, | 14 ,, |

☞ நார்மடி வேஷ்டிகளில் சொந்த குறிபோட்டும் அனுப்பலாம். விலை அணா 8 முதல் ரூ. 1 வரை கூடும்.

---

௨

## புதுச்சேரி பட்டுப் புடவைகள்

16 மு × 44 இஞ்ச புடவை விலை ரூ. 28
18 மு × 44 ,, ,, விலை ரூ. 30

---

விலாசம்:—

மானேஜர்,
"லக்ஷ்மி" ஆபீஸ்,
தபால் பெட்டி 99, மதராஸ்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
894.811
2297
28 MAY 1924

உ

கணபதி துணை.

# கந்தரலங்காரம்.

---

## காப்பு.

கட்டளைக் கலித்துறை.

அடல் அருணைத்திருக் கோபுரத்தே
அந்த வாயிலுக்கு
வடஅருகிற்சென்று கண்டுகொண்
டேன்வரு வார்தலையில்
தடபடெனப்படு குட்டுடன்
சர்க்கரை மொக்கியகைக்
கடதடகும்பக் களிற்றுக்
கிளைய களிற்றினையே.

## நூல்.

பேற்றைத் தவஞ்சற்று மில்லாத
வென்னை ப்ரபஞ்சமென்னும்
சேற்றைக் கழிய வழிவிட்டவா
செஞ் சடா டவிமேல்
ஆற்றைப் பணியை இதழியைத்
தும்பையை அம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான்
குமாரன் க்ருபாகரனே. (1)

அழித்துப் பிறக்க வொட்டா அயில்
வேலன் கவியை அன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர்
எரி மூண்டதென்ன
விழித்துப் புகைபெழப் பொங்குவெங்
கூற்றன் விடுங்கயிற்றால்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன்றோ
கவி கற்கின்றதே.

தேரணி யிட்டுப் புரமெரித்
தான்மகன் செங்கையில்வேல்
கூரணி யிட்டணு வாகி
க்ரௌஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த
கடக நெளிந்தது சூர்ப்
பேரணி கெட்டது தேவேந்த்ர
லோகம் பிழைத்ததுவே.

ஓரவொட்டார் ஒன்றை உன்ன
வொட்டார் மல ரிட்டு நின்தாள்
சேரவொட்டார் ஐவர் செய்வதென்
யான்சென்று தேவருய்யச்
சோரநிட் டூரனைச் சூரனைக்
காருடல் சோரி கக்கக்
கூரகட் டாரியிட் டோரிமைப்
போதினில் கொன்றவனே.

திருந்தப் புவனங்கள் ஈன்றபொற்
பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டில்
ஏறி அறுவர்கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச்
சூரழ விம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென்
றோதுங் குவலயமே.

பெரும்பைம் புனத்தினுள் சிற்றே
　　னல் காக்கின்ற பேதைகொங்கை
விரும்புங் குமரனை மெய்யன்பி
　　னல்மெல்ல மெல்லஉள்ள
அரும்புந் தனிப்பர மானந்தந்
　　தித்தித் தறிந்தஅன்றே
கரும்புந் துவர்த்துச்செந் தேனும்
　　புளித்தறக் கைத்ததுவே. (6)

சளத்திற் பிணிபட்ட சட்டுக்ரி
　　யைக்குள் தவிக்குமென் றன்
உளத்தில் ப்ரமத்தைத் தவிர்ப்பாய்
　　அவுணர் உரத்துதிரக்
குளத்திற் குதித்துக் குளித்துக்
　　களித்துக் குடித்துவெற்றிக்
களத்திற் செருக்கிக் கழுதாட
　　வேல்தொட்ட காவலனே. (7)

ஒளியில் விளைந்த உயர்ஞான
　　பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்தொ ரானந்தத்
　　தேனை அநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப்
　　பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பியவா முக
　　மாறுடைத் தேசிகனே. (8)

தேனென்று பாகென் றுவமிக்கொணு
　　மொழித் தெய்வவள்ளி
கோனன் றெனக்குப தேசித்த
　　தொன்றுண்டு கூறவற்றே
வான்அன்று கால்அன்று தீஅன்று
　　நீர்அன்று மண்ணும்அன்று
தான்அன்று நானன் றசரீரி
　　அன்று சரீரிஅன்றே. (9)

026:417 N24

சொல்லுகைக் கில்லையென் றெல்லா
மிழந்துசும் மாவிருக்கும்
எல்லையுள் செல்ல எனைவிட்டவா
இகல் வேலனல்ல
கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியைக்
கல்வரைக் கொவ்வைச் செவ்வாய்
வல்லியைப் புல்கின்ற மால்வரைத்
தோளண்ணல் வல்லபமே. (10)

குசைநெகி ழாவெற்றி வேலோன்
அவுணர் குடர்குழம்பக்
கசையிடு வாசி விசைகொண்ட
வாகனப் பீலியின்கொத்
தசைபடு கால்பட் டசைந்தது
மேரு அடியிடஎண்
திசைவரை தூள்பட்ட அத்தூளில்
வாரி திடர்பட்டதே. (11)

படைபட்ட வேலவன் பால்வந்த
வாகைப் பதாகையென்னுந்
தடைபட்ட சேவல் சிறகடி
கொள்ளச் சலதிகிழிந்
துடைபட்ட தண்ட கடாக
முதிர்ந்த துடுபடலம்
இடைபட்ட குன்றமும் மாமேரும்
வெற்பும் இடிபட்டவே. (12)

ஒருவரைப் பங்கி லுடையாள்
குமாரன் உடைமணிசேர்
திருவரைக் கிண்கிணி ஓசை
படத்திடுக் கிட்டரக்கர்
வெருவரத் திக்குச் செவிடுபட்
டெட்டுவெற்பும் கனகப்
பருவரைக் குன்றும் அதிர்ந்தன
தேவர் பயங் கெட்டதே. (13)

225589

குப்பாச வாழ்க்கையுட் கூத்தாடு
 மைவரில் கொட்படைந்த
இப்பாச நெஞ்சனை ஈடேற்றுவாய்
 இரு நான்குவெற்பும்
அப்பாதி யாய்விழ மேருங்
 குலுங்கவிண் ணோரு முய்யச்
சப்பாணி கொட்டிய கையா
 றிரண்டுடைச் சண்முகனே. (14)

தாவடி யோட்டு மயிலிலுந்
 தேவர் தலையிலுமென்
பாவடி யேட்டிலும் பட்டதன்
 றோபடி மாவலிபான்
மூவடி கேட்டன்று மூதண்ட
 கூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான்
 மருகன் தன் சிற்றடியே. (15)

தடுங்கோள்மனத்தை விடுங்கோள்
 வெகுளியைத் தானம் என்றும்
இடுங்கோ ளிருந்த படியிருங்
 கோள் எழு பாரும் உய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந்
 திறக்கத் தொளைக்க வைவேல்
விடுங்கோன் அருள்வந்து தானே
 உமக்கு வெளிப்படுமே. (16)

வேதா கமசித்ர வேலாயுதன்
 வெட்சி பூத்ததண்டைப்
பாதார விந்தம் அரணாக
 அல்லும் பகலும் இல்லாச்
சூதான தற்ற வெளிக்கே
 ஒளித்துச்சும் மாவிருக்கப்
போதாய் இனிமனமே தெரி
 யாதொரு பூதர்க்குமே. (17)

வையில் கதிர்வடி வேலோனை
 வாழ்த்தி வறிஞர்க்கென்று
நொய்யில் பிளவளவேனும்
 பகிர்மின்கள் நுங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க உதவா
 வுடம்பின் வெறுநிழல்போல்
கையிற் பொருளு முதவாது
 காணும் கடைவழிக்கே. (18)

சொன்ன க்ரௌஞ்ச கிரியூ
 டுருவத் தொளைத்த வைவேல்
மன்ன கடம்பின் மலர் மாலை
 மார்ப மௌனத்தை யுற்று
நின்னை யுணர்ந் துணர்ந் தெல்லா
 மொருங்கிய நிர்க்குணம்பூண்
டென்னை மறந்திருந் தேன்இறந்
 தேவிட்ட திவ்வுடம்பே. (19)

கோழிக் கொடியன் அடிபணி
 யாமல் குவலயத்தே
வாழக் கருது மதியிலி
 காள் உங்கள் வல்வினைநோய்
ஊழிப் பெருவலி உண்ணவொட்
 டாதுங்கள் அத்தமெல்லாம்
மாழப் புதைத்துவைத் தால்வருமோ
 நும் அடிப்பிறகே. (20)

மரணப்ர மாத நமக்கில்லை
 யாமென்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலும்உண்டே
 கிண் கிணிமுகுள
சரணப்ர தாப சசிதேவி
 மங்கல்ய தந்துரக்ஷா
பரணக்ரு பாகர ஞான
 காகர பாஸ்கரனே. (21)

மொய்தா ரணிகுழல் வள்ளியை
வேட்டவன் முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப்
போன்வெய்ய வாரணம்போல்
கைதான் இருப துடையான்
தலைபத்துங் கத்தரிக்க
வெய்தான் மருக னுமையாள்
பயந்த இலஞ்சியமே. (22)

தெய்வத் திருமலைச் செங்கோட்டில்
வாழும் செழுஞ்சுடரே
வைவைத்த வேல்படை வானவனே
மறவேன் உனை நான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண்
டோட்டி அதில் இரண்டு
கைவைத்த வீடு குலையுமுன்னே
வந்து காத்தருளே. (23)

கின்னங் குறித்தடி யேன்செவி
நீயன்று கேட்கச்சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கி
விட்டது கோடுகுழல்
சின்னங் குறிக்கக் குறிஞ்சிக்
கிழவர் சிறுமிதனை
முன்னங் குறிச்சியிற் சென்றுகல்
யாணம் முயன்றவனே. (24)

தண்டா யுதமுந் திரிசூலமும்
விழத் தாக்கி உன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு
வேன்செந்தில் வேலனுக்குத்
தொண்டாகிய என் னவிரோத
ஞானச் சுடர்வடிவாள்
கண்டா யடா அந்தகா வந்துபார்
சற்றென் கைக்கெட்டவே. (25)

நீலச் சிகண்டியி லேறும்
பிரான்எந்த நேரத்திலுங்
கோலக் குறத்தி யுடன்வரு
வான்குரு நாதன்சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி
வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார்மரிப்
பார்வெறும் கர்மிகளே. (26)

ஓலேயுந் தூதருங் கண்டுதிண்
டாடல் ஒழித்தெனக்குக்
காலேயும் மாலேயும் முன்னிற்குமே
கந்த வேள்மருங்கில்
சேலேயுங் கட்டிய சீராவுங்
கையில் சிவந்தசெச்சை
மாலேயுஞ் சேவற் பதாகையுந்
தோகையும் வாகையுமே. (27)

வேலே விளங்குகை யான்செய்ய
தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளஇங்ஙன் காண்பதல்
லான் மன வாக்குச்செய
லாலே அடைதற் கரிதாய்
அருவுரு வாகி ஒன்று
போலே யிருக்கும் பொருளேயெவ்
வாறு புகல்வதுவே. (28)

கடத்தில் குறத்தி பிரானரு
ளால் கலங்காத சித்தத்
திடத்தில் புணேஎன யான்கடந்
தேன்சித்ர மாதால்குல்
படத்தில் கழுத்தில் பழுத்தசெவ்
வாயில் பணேயில் உந்தித்
தடத்தில் அனத்தில் கிடக்கும்
வெங்காம சமுத்திரமே. (29)

பாலென் பதுமொழி பஞ்சென்
பது பதம் பாவையர் கண்
சேலென் பதாகத் திரிகின்ற
நீசெந்தி லோன்றிருக்கை
வேல் என்கிலே கொற்ற மயூர
மென்கிலே வெட்சித்தண்டைக்
கால் என்கிலே மனமே எங்ஙனே
முத்தி காண்பதுவே. (30)

பொக்கக் குடிலில் புகுதா
வகைப்புண்ட ரீகத்தினும்
செக்கச் சிவந்த கழல்வீடு
தந்தருள் சிந்துவெந்து
கொக்குத் தறிபட் டெறிபட்
டுதிரங் குமுகுமெனக்
கக்கக் கிரி உருவக் கதிர்வேல்
தொட்ட காவலனே. (31)

கிளைத்துப் புறப்பட்ட சூர்மார்
புடன்கிரி யூடுருவத்
தொளைத்துப் புறப்பட்டவேல்கந்த
னே. துறந் தோருளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்கப்
பதைக்க வதைக்குங் கண்ணார்க்
கிளைத்துத் தவிக்கின்ற என்னையெந்
நாள்வந் திரட்சிப்பையே. (32)

முடியாப் பிறவிக் கடலில்
புகார் முழு துங்கெடுக்கும்
மிடியால் படியில் விதனப்
படார் வெற்றி வேல்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள்
அவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு
நாமம் புகல்பவரே. (33)

பொட்டாக வெற்பைப் பொருதகந்தா
தப்பிப் போனதொன்றற்
கெட்டாத ஞான கலைதரு
வாய் இருங் காமவிடாய்
பட்டார் உயிரைத் திருகிப்
பருகிப் பசிதணிக்குங்
கட்டாரி வேல்விழி யார்வலைக்கே
மனங் கட்டுண்டதே. (34)

பத்தித் துறையிழிந் தானந்த
வாரி படிவதினால்
புத்தித் தரங்கந் தெளிவதென்
றோ பொங்கு வெங்குருதி
மெத்திக் குதிகொள்ள வெஞ்சூ
ரனைவிட்ட சுட்டியிலே
குத்தித் தரங்கொண் டமரா
வதி கொண்ட கொற்றவனே. (35)

சுழித்தோடு மாற்றில் பெருக்கா
னது செல்வம் துன்பம் இன்பங்
கழித்தோடு கின்றதெக் காலம் நெஞ்
சே கரிக் கோட்டு முத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோட
னென்கிலை குன்றம் எட்டுங்
கிழித்தோடு வேலென் கிலையெங்ங
னேமுத்தி கிட்டுவதே. (36)

கண்டுண்ட சொல்லியர் மெல்லியர்
காமக் கலவிக்கள்ளை
மொண்டுண் டயர்கினும் வேல்மற
வேன்முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடுடு டூடு
டுடுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண்டெனக் கொட்டியாடவெ
ஞ்சூர்க்கொன்ற ராவுத்தனே. (37)

நாள்என் செயும் வினை தான்என்
செயும்எனை நாடிவந்த
கோள்என் செயும் கொடும் கூற்றென்
செயும் குமரேசஇரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்
னேவந்து தோன்றிடினே. (38)

உதித்தாங் குழல்வதும் சாவதும்
தீர்த்தெனை யுன்னிலொன்று
விதித்தாண் டருள்தருங் காலமுண்
டோவெற்பு நட்டுரக
பதித்தாம்பு வாங்கிநின் றம்பரம்
பம்பரம் பட்டுழல
மதித்தான் திருமருகா மயி
லேறிய மாணிக்கமே. (39)

சேல்பட் டழிந்தது செந்தூர்
வயல்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி
யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ்
சூரனும் வெற்பும்அவன்
கால்பட் டழிந்ததிங் கென்றலை
மேல்அயன் கையெழுத்தே. (40)

பாலே அனைய மொழியார்தம்
இன்பத்தைப் பற்றியென்றும்
மாலேகொண் டுய்யும் வகையறியேன்
மலர்த் தாள்தருவாய்
காலே மிகவுண்டு காலே
யிலாத கணபணத்தின்
மேலே துயில்கொள்ளு மாலோன்
மருகசெவ் வேலவனே. (41)

நிணங்காட்டுங் கொட்டிலை விட்
டொரு வீடெய்தி நிற்கநிற்கும்
குணங்காட்டி ஆண்ட குருதே
சிகன்அங் குறச்சிறுமான்
பணங்காட்டு மல்குல் குருகும்
குமரன் பதாம்புயத்தை
வணங்காத் தலைவந்தி தெங்கே
யெனக் கிங்ஙன் வாய்த்ததுவே. (42)

கவியால் கடல்அடைத் தோன்மரு
கோனைக் கணபணக்கட்
செவியாற் பணியணி கோமான்
மகனைத் திறல்அரக்கர்
புவியார்ப் பெழத்தோட்டபோர்வேல்
முருகனைப் போற்றிஅன்பால்
குவியாக் கரங்கள்வந் தெங்கே
யெனக் கிங்ஙன் கூடியவே. (43)

தோலால் சுவர்வைத்து நாலாறு
காலில் சுமத்திஇரு
காலால் எழுப்பி வளைமுது
கோட்டிக் கை நாட்டி நரம்
பாலார்க் கையிட்டுத் தசைகொண்டு
மேய்ந்த அகம் பிரிந்தால்
வேலால் கிரிதொளைத் தோன்இரு
தாளன்றி வேறில்லையே. (44)

ஒருபூதரு மறியாத்தனி
வீட்டில் உரைஉணர்வற்
றிருபூத வீட்டில் இராமலென்
றானிரு கோட்டொருகைப்
பொருபூ தரமுரித் தேகாச
மிட்ட புராந்தகற்குக்
குருபூத வேலவன் நிட்டூர
சூர குலாந்தகனே. (45)

நீயான ஞான விநோதந்
 தனையென்று நீ அருள்வாய்
சேயான வேல் கந்தனே செந்தி
 வாய் சிந்ர மாத ரல்குல்
தோயா அருகிப் பருகிப்
 பெருகித் துவளும் இந்த
மாயா விநோத மனோதுக்க
 மானது மாய்வதற்கே. (46)

பத்தித் திருமுகம் ஆறுடன்
 பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுதுகண்
 டேன் செயல் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப்
 பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும் பர
 மானந்த சாகரத்தே. (47)

புத்தியை வாங்கிநின் பாதாம்
 புயத்தில் புகட்டி அன்பாய்
முத்தியை வாங்க அறிகின்றி
 லேன்முழு சூர்நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ
 குவடு தவிடுபடக்
குத்திய காங்கேயனே வினை
 யேற்கென் குறித்தனையே (48)

சூரில் கிரியில் கதிர் வேல்
 எறிந்தவன் தொண்டர்குழாஞ்
சாரிற் கதியன்றி வேறிலை
 காண் தண்டு தாவடிபோய்த்
தேரில் கரியில் பரியில்
 திரி யவர் செல்வமெல்லாம்
நீரில் பொறியென் றறியாத
 பாவி நெடு நெஞ்சமே. (49)

படிக்குந் திருப்புகழ் போற்றுவன்
கூற்றுவன் பாசத்தினல்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்சலென்
பாய் பெரும் பாம்பினின்று
நடிக்கும் பிரான்மருகா கொடுஞ்
சூரன் நடுங்க வெற்பை
பிடிக்குங் கலாபத் தனிமயில்
ஏறும் இரா வுத்தனே. (50)

மலையாறு கூறெழ வேல்வாங்கி
னானை வணங்கி அன்பின்
நிலையான மாதவஞ் செய்குமினோ
நும்மை நேடிவருந்
தொலையா வழிக்குப் பொதிசோறும்
உற்ற துணையுங் கண்டீர்
இலையா யினும்வெந்த தேதா
யினும் பகிர்ந் தேற்றவர்க்கே. (51)

சிகராத்ரி கூறிட்டவேலும் செஞ்
சேவலும் செந்தமிழால்
பகரார்வ மீபணி பாச சங்
க்ராம பணாமகுட
நிகராட் சமபட்ச பட்சி
துரங்க நிருப குமரா
குகராட் சசபட்ச விட்சோப
தீர குணதுங்கனே (52)

வேடிச்சி கொங்கை விரும்புங்
குமரனை மெய்யன்பினல்
பாடிக் கசிந்துள்ள போதே
கொடாதவர் பாதகத்தால்
தேடிப் புதைத்துத் திருட்டில்
கொடுத்துத் திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை
வீணுக்கு மாய்ப்பவரே. (53)

சாகைக்கும் மீண்டு பிறக்கைக்கும்
அன்றித் தளர்ந்தவர்க்கொன்
றீகைக் கெனைவிதித் தாயிலை
யே இலங்காபுரிக்குப்
போகைக்கு நீவழி காட்டென்று
போய்க்கடல் தீக்கொளுந்த
வாகைச் சிலைவளைத் தோன்மருகா
மயில் வாகனனே. (54)

ஆங்கா ரமும் அடங்கா ஒடுங்
கார் பர மானந்தத்தே
தேங்கார் நினைப்பும் மறப்பும்
அறார் தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே
முருகன் உருவங்கண்டு
தூங்கார் தொழும்புசெய் யார் என்
செய் வார் யமதூதருக்கே. (55)

கிழியும் படிஅடர் குன்றெறிந்
தோன் கவி கேட்டுருகி
இழியுங் கவிகற் றிடாதிருப்
பீர் எரி வாய் நரகக்
குழியுந் துயரும் விடாய்ப்படக்
கூற்றுவன் ஊர்க்குச்செல்லும்
வழியுந் துயரும் பகரீர்
பகரீர் மறந்தவர்க் கே. (56)

பொருபிடி யும் களிறும் விளை
யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல சண்முக
வா எனச் சாற்றிநித்தம்
இருபிடி சோறுகொண்டிட்டுண்
டிருவினை யோம் இறந்தால்
ஒருபிடி சாம்பருங் காணாது
மாய உடம்பிதுவே. (57)

நெற்றுப் பசுங்கதிர்ச் செவ்வேனல்
காக்கின்ற நீலவள்ளி
முற்றுத் தனத்திற் கினிய
பிராணிக்கு முல்லையுடன்
பற்றுக் கையும்வெந்து சங்க்ராம
வேளும் படவிழியால்
செற்றூர்க் கினியவன் தேவேந்த்ர
லோக சிகாமணியே. (58)

பொங்கார வேலையில் வேலைவிட்
டோன் அருள் போலுதவ
வெங்கா யினும் வரு மேற்பவர்க்
கிட்ட திடாமல்வைத்த
வங்கா ரமு முங்கள் சிங்கார
வீடு மடந்தையருள்
சங்காத மோ கெடுவீர் உயிர்
போமத் தனிவழிக்கே. (59)

சிந்திக்கிலேன் நின்று சேவிக்கி
லேன் தண்டைச் சிற்றடியை
வந்திக்கிலேனென்றும் வாழ்த்துகி
லேன்மயில் வாகனனைச்
சந்திக்கி லேன்பொய்யை நிந்திக்கி
லேன் உண்மை சாதிக்கிலேன்
புந்திக்கி லேசமும் காயக்கி
லேசமும் போக்குதற்கே. (60)

வரையற் றவுணர் சிரமற்று
வாரிதி வற்றச்செற்ற
புரையற்ற வேலவன் போதித்தவா
பஞ்ச பூதமுமற்
றுரையற் றுணர்வற் றுடலற்
றுயிரற் றுபாயமற்றுக்
கரையற் றிருளற் றெனதற்
றிருக்குமக் காட்சியதே. (61)

ஆலுக் கணிகலம் வெண்டலை
மாலை அகிலமுண்ட
மாலுக் கணிகலந் தண்ணந்
துழாய் மயில் ஏறும் ஐயன்
காலுக் கணிகலம் வானோர்
முடியும் கடம்பும் கையில்
வேலுக் கணிகலம் வேலையும்
சூரனும் மேருவுமே. (62)

பாதித் திருவுருப் பச்சென்
றவர்க்குத்தன் பாவனையைப்
போதித்த நாதனைப் போர்வே
லனைச்சென்று போற்றி யுய்யச்
சோதித்த மெய்யன்பு பொய்யோ
அழுது தொழு துருகிச்
சாதித்த புத்திவந் தெங்கே
யெனக்கிங்ஙன் சந்தித்ததே. (63)

பட்டிக் கடாவில் வருமந்தகா
உனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண்ட லாதுவி
டேன் வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெரு
மாள்திரு முன்பு நின்றேன்
கட்டிப் புறப்பட டா சத்தி
வாளென்றன் கையதுவே. (64)

வெட்டுங் கடாமிசைத் தோன்றும்
வெங் கூற்றன் விடுங்கயிற்றால்
கட்டும் பொழுது விடுவிக்க
வேண்டுங் கரா சலங்கள்
எட்டுங் குலகிரி எட்டும்விட்
டோடவெட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்குங்
கலாப மயூரத்தனே. (65)

நீர்க்கு மிழிக்கு நிகரென்பர்
யாக்கை நில்லாது செல்வம்
பார்க்கு மிடத்தந்த மின்போலு
மென்பர் பசித்துவந்தே
ஏற்கும் அவர்க்கிட என்னினெங்
கேனும் எழுந்திருப்பார்
வேற்கு மரர்க் கன்பி லாதவர்
ஞானம் மிகவுநன்றே. (66)

பெறுதற் கரிய பிறவியைப்
பெற்றுநின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற்றி
லேன் மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட்சங் க்ராம
சயில சரசவல்லி
இறுகத் தழுவுங் கடகா
சலப்பன் னிருபுயனே. (67)

சாடுஞ் சமரத் தனிவேல்
முருகன் சரணத்திலே
ஓடும் கருத்தை இருத்தவல்
லார்க் குகம்போய்ச் சகம்போய்ப்
பாடுங் கவுரி பவுரிகொண்
டாடப் பசுபதிநின்
றாடும் பொழுது பரமா
யிருக்கு மதீதத்திலே. (68)

தந்தைக்கு முன்னந் தனிஞான
வாளொன்று சாதித்தருள்
கந்தச் சுவாமி எனைத்தேற்
றிய பின்னர்க் காலன்வெம்பி
அந்திப் பொழுதென்னை என்செய
லாஞ்சத்தி வாளொன்றினால்
சிந்தத் துணிப்பன் றணிப்பருங்
கோப த்ரிசூலத்தையே. (69)

விழிக்குத் துணை திரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணை முருகா வெனு
நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்
செங்கோடன் மயூரமுமே. (70)

துருத்தி யெனும்படி கும்பித்து
வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி உடம்பை ஒறுக்கிலென்
னும் சிவ யோகமெனும்
குருத்தை யறிந்து முகமா
றுடைக்குரு நாதன்சொன்ன
கருத்தை மனத்தில் இருத்துங்கண்
டீர்முத்தி கைகண்டதே. (71)

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே. (72)

போக்கும் வரவும் இரவும்
பகலும் புறம்பு முள்ளும்
வாக்கும் வடிவும் முடிவுமில்
லாதொன்று வந்துவந்து
தாக்கு மனோலயந் தானே
தருமெனைத் தன்வசத்தே
ஆக்கு மறுமுகவா சொல்
லொணு திந்த ஆனந்தமே (73)

அராப்புனை வேணியன் சேயருள்
வேண்டும், அவிழ்ந்த அன்பாம்
குராப்புனை தண்டையந் தாள்தொழல்
வேண்டும், கொடிய ஐவர்
பராக்கறல் வேண்டும் மனமும்
பதைப்பறல் வேண்டும் என்றால்
இராப்பகல் அற்ற இடத்தே
இருக்கை எளிதல்லவே (74)

படிக்கின் றிலை பழனித்திரு
நாமம் படிப்பவர் தாள்
முடிக்கின் றிலை முருகா வென்
கிலைமுசி யாமல் இட்டு
மிடிக்கின் றிலை பர மானந்த
மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலை நெஞ்சமே தஞ்ச
மேது நமக்கினியே. (75)

கோடாத வேதனுக் கியான்செய்த
குற்றமென் குன்றெறிந்த
தாடாளனே தென் றணிகைக்
குமர நின் தண்டையந்தாள்
சூடாத சென்னியும் நாடாத
கண்ணும் தொழாத கையும்
பாடாத நாவும் எனக்கே
தெரிந்து படைத்தனனே (76)

சேல்வாங்கு கண்ணியர் வண்ணப்
பயோதரம் சேர எண்ணி
மால்வாங்கி ஏங்கி மயங்காமல்
வெள்ளி மலை எனவே
கால்வாங்கி நிற்கும் களிற்றான்
கிழத்தி கழுத்திற்கட்டு
நூல்வாங்கி டாதன்று வேல்வாங்கி
பூங்கழல் நோக்கு நெஞ்சே. (77)

கூர்கொண்டவேலனைப் போற்றாமல்
ஏற்றங்கொண் டாடுவீர்காள்
போர்கொண் டகாலன் உமைக் கொ
ண்டு போம் அன்று பூண்பனவும்
தார்கொண்ட மாதரும் மாளிகை
யும்பணச் சாளிகையும்
ஆர்கொண்டு போவரையோ கெடு
வீர் நும் அறிவின்மையே. (78)

பந்தாடு மங்கையர் செங்கயற்
பார்வையில் பட்டுழலுஞ்
சிந்தா குலந்தன்னைத் தீர்த்தருள்
வாய் செய்ய வேல்முருகா
கொந்தார் கடம்பு புடைசூழ்
திருத்தணிக் குன்றில் நிற்கும்
கந்தா இளங்குமரா அம
ராவதி காவலனே (79)

மாகத்தை முட்டி வரு நெடுங்
கூற்றன்வந் தாலென் முன்னே
தோகைப் புரவியில் தோன்றிநிற்
பாய் சுத்த நித்தமுத்தித்
த்யாகப் பொருப்பைத் த்ரிபுராந்
தகனைத் த்ரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரமகல்
யாணி தன் பாலகனே. (80)

தாரா கணம் எனும் தாய்மார்
அறுவர் திருமுலைப்பால்
ஆராதுமை முலைப் பாலுண்ட
பாலன் அரையிற்கட்டுஞ்
சீராவுங் கையில் சிறுவாளும்
வேலும் என் சிந்தையவே
வாரா தகலந்தகா வந்த
போ துயிர் வாங்குவனே (81)

தகட்டில் சிவந்த கடம்பையும்
நெஞ்சையும் தாளிணைக்கே
புகட்டிப் பணியப் பணித்தரு
ளாய் புண்ட ரீகன் அண்ட
முகட்டைப்பிளந்து வளர்ந்திந்த்ர
லோகத்தை முட்டவெட்டிப்
பகட்டில் பொருதிட்ட நிட்ரே
சூர பயங்கரனே (82)

தேங்கிய அண்டத் திமையோர்
சிறைவிடச் சிற்றடிக்கே
பூங்கழல் கட்டும் பெருமாள்
கலாபப் புரவிமிசை
தாங்கி நடப்ப முறிந்தது
சூரன் தளந்தனிவேல்
வாங்கி அனுப்பிடக் குன்றங்கள்
எட்டும் வழி விட்டவே (83)

மைவருங் கண்டத்தர் மைந்த கந்தா
வென்று வாழ்த்துமிந்தக்
கைவருந் தொண்டன்றி மற்றறியேன்
கற்ற கல்வியும்போய்ப்
பைவரும் கேளும் பதியும்
கதறப் பழகி நிற்கும்
ஐவருங் கைவிட்டு மெய்விடும்
போதுன் அடைக்கலமே (84)

காட்டிற் குறத்தி பிரான் பதத்தே
கருத்தைப் புகட்டின்
வீட்டிற் புகுத மிக எளிதே
விழி நாசி வைத்து
மூட்டிக் கபாலமூ லாதாரம்
நேர்அண்ட மூச்சை யுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கும் ஓடாமல்
சாதிக்கும் யோகிகளே. (85)

வேலா யுதன்சங்கு சக்ராயுதன்
விரிஞ் சன் அறியாச்
சூலாயுதன் தந்த கந்தச்
சுவாமி சுடர்க்குடுமிக்
காலா யுதக்கொடி யோனருளாய
கவசம் உண்டென்
பாலா யுதம் வருமோ யம
னோடு பகைக்கினுமே. (86)

குமரா சரணம் சரணம் என்
றண்டர் குழாந் துதிக்கும்
அமரா வதியில் பெருமாள்
திருமுகம் ஆறும் கண்ட
தரமாகி வைகுந் தனியான
ஞான தபோதனர்க்கிங்
கெம ராசன் விட்ட கடையேடு
வந்தினி என் செயுமே (87)

வணங்கித் துதிக்க அறியா
மனிதர் உடன் இணங்கிக்
குணங்கெட்ட துட்டனை ஈடேற்று
வாய் கொடியும் கழுகும்
பிணங்கத் துணங்கை யலகைகொ
ண்டாடப் பிசிதர் தம்வாய்
நிணங்கக்க விக்ரம வேலாயுதம்
தொட்ட நிர்மலனே. (88)

பங்கே ருகனெனைப் பட்டோ
லையில் இடப் பண்டு தளை
தங்காலில் இட்ட தறிந்திலனோ
தனி வேல் எடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்
னஞ் சிலம்பு புலம்பவரும்
எங்கோன் அறியின் இனிநான்
முகனுக் கிரு விலங்கே. (89)

மாலோன் மருகனை மன்றாடி
மைந்தனை, வானவர்க்கு
மேலான தேவனை மெஞ்ஞான
தெய்வத்தை மேதினியில்
சேலார் வயற் பொழிற் செங்கோ
டனைச் சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்திலனே
அந்த நான் முகனே. (90)

கருமான் மருகனைச் செம்மான்
மகளைக் களவு கொண்டு
வருமா குலவனைச் சேவல் கைத்
தோளனை வானம் உய்யப்
பொருமாவினைச் செற்ற போர்வேல
னைக் கன்னிப் பூக முடன்
தருமா மருவுசெங் கோடனை
வாழ்த்துகை சால நன்றே. (91)

தொண்டர்கண் டண்டிமொண்டு
ண்டிருக்குஞ் சுத்த ஞானமெனுந்
தண்டையம் புண்டரி கந்தருவாய்
கண்ட தண்டவெஞ்சூர்
மண்டலங் கொண்டுபண் டண்டரண்
டங்கொண்டு மண்டிமிண்டக்
கண்டுருண் டண்டர் விண்டோடாமல்
வேல்தொட்ட காவலனே. (92)

மண்கமழ் உந்தித் திருமால்
வலம்புரி ஓசை அந்த
விண்கமழ் சோலையும் வாவியுங்
கேட்டது வேல் எடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும்
பிள்ளை திருஅரையில்
கிண்கிணி யோசை பதினா
லுலக முங் கேட்டதுவே. (93)

725589.

தெள்ளிய ஏனலில் கிள்ளையைக்
கள்ளச் சிறுமியெனும்.
வள்ளியை வேட்டவன் தாள்வேட்
டிலை சிறு வள்ளை தள்ளித்
துள்ளிய கெண்டையைத் தொண்
டையைத் தோதகச் சொல்லை நல்ல
வெள்ளிய நித்தில வித்தார
மூரலை வேட்ட நெஞ்சே. (94)

யான்தான் எனும்சொ லிரண்டுங்
கெட்டால் அன்றி யாவருக்குந்
தோன்றாது சத்தியந் தொல்லைப்
பெருநிலம் சூகரமாய்க்
கீன்றான் மருகன் முருகன் க்ரு
பாகரன் கேள்வியினால்
சான்றாரு மற்ற தனிவெளிக்கே
வந்து சந்திப்பதே. (95)

தடக்கொற்ற வேள்மயிலே இடர்
தீரத் தனிவிடில்நீ
வடக்கில் கிரிக்கப் புறத்துநின்
றோகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்தும் கதிர்க்கப்
புறத்தும் கனக சக்ரத்
திடர்க்கப் புறத்தும் திசைக்கப்
புறத்தும் திரிகுவையே. (96)

சேலில் திகழ்வயற் செங்கோட
வெற்பன் செழுங் கலபி
ஆலித் தனந்தன் பணா முடி
தாக்க வதிர்ந் ததிர்ந்து
காலில் கிடப்பன மாணிக்க
ராசியும் காசினியைப்
பாலிக்கு மாயனும் சக்ரா
யுதமும் பணில முமே. (97)

கதிதனை ஒன்றையம் காண்கின்
றிலேன் கந்த வேல் முருகா
நதிதனை அன்னபொய் வாழ்விலன்
பாய்நரம் பாற் பொதிந்த
பொதிதனை யுங்கொண்டு திண்டாடு
மாறெனைப் போதவிட்ட
விதிதனை நொந்து நொந் திங்கே
என்றன்மனம் வேகின்றதே (98)

காவிக் கமலக் கழலுடன்
சேர்த்தெனைக் காத்தருளாய்
தூவிக் குலமயில் வாகன
னே துணை எதும்இன்றித்
தாவிப் படரக் கொழு கொம்
பிலாத தனிக் கொடிபோல்
பாவித் தனிமனந் தள்ளாடி
வாடிப் பதைக்கின்றதே. (99)

இடுதலைச் சற்றுங் கருதேனைப்
போதமி லேனை அன்பால்
கெடுதல் இலாத்தொண்ட ரிற்கூ
டியவா கிரௌஞ்ச வெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன்
பிறவி அற விச்சிறை
விடுதலைப் பட்டது விட்டது
பாச வினை விலங்கே. (100)

## நூற்பயன்.

சலங்காணும் வேந்தர் தமக்குமஞ்சார்
யமன் சண்டைக்கஞ்சார்,
துலங்கா நரகக் குழியணுகார்
துட்ட நோயணுகார்
கலங்கார் புலிக்குங் கரடிக்கும்
யானைக்குங் கந்தன் நன்னூல்
அலங்கார நூற்றுள் ஒருகவி
தான்கற் றறிந்தவரே.

முற்றிற்று.

சிலபிரதிகளிலே அதிகமாகக் காணப்பட்ட

## பாட்டுகள்.

---

திருவடியும் தண்டையும் சிலம்பும்
சிலம் பூடுருவப்
பொருவடி வேலும் கடம்புந்
தடம்புயம் ஆறிரண்டும்
மருவடி வான வதனங்களாறும்
மலர்க் கண்களும்
குருவடி வாய் வந்தென் னுள்ளங்
குளிரக் குதிகொண்டவே.

இராப்பகல் அற்ற இடம் காட்டி
யானிருந் தேதுதிக்கக்
குராப்புனை தண்டைஅந் தாள்அரு
ளாய், கரிகூப்பிட்டநாள்
கராப்படக் கொன்றக் கரிபோற்ற
நின்ற கடவுள் மெச்சும்
பராக்ரம வேல நிருதசங் கார
பயங் கரனே.

செங்கேழ் அடுத்த சினவடிவேலும்
திருமுக மும்
பங்கே நிரைத்தநல் பன்னிரு
தோளும் பதும மலர்க்
கொங்கேதரளஞ் சொரியும்செங்
கோடைக் குமரன்என
எங்கே நினைப்பினும் அங்கேஎன்
முன்வந் தெதிர்நிற்பனே.

ஆவிக்கு மோசம் வருமா
றறிந்துன் அருட்பதங்கள்
சேவிக்க வென்று நினைக்கின்றிலேன்
வினை தீர்த்தருளாய்
வாவித் தடவயல் சூழுந்திருத்தணி
மாமலை வாழ்
சேவற் கொடியுடையானே அமர
சிகா மணியே.

கொள்ளித் தலையில் எறும்பது
போலக் குலையும் என்றன்
உள்ளத் துயரை ஒழித்தருளாய்
ஒரு கோடிமுத்தந்
தெள்ளிக் கொழிக்குங் கடற்செந்
தின் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவனே மயிலேறிய
மாணிக்கமே.

சூலம் பிடித்தெம பாசஞ்சுழற்றித்
தொடர்ந்துவருங்
காலன் தனக்கொரு காலும் அஞ்
சேன் கடல் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான் குமாரன்
அறு முகவன்
வேலுந் திருக்கையும் உண்டே
நமக்கொரு மெய்த்துணையே.

உ

முருகன் துணை.

# கந்தர் சஷ்டி கவசம்.

---

## காப்பு.

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பாலித்துக்—கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நூல்.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்

பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட

மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வேலால் எனைக் காக்க என்றுவந்து

வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக

இந்திரன் முதலா எண் திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக

சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக

ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி

விணபவ சரஹ வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென

வசர ஹணப வருக வருக
அசுரர் குடி கெடுத்த ஐயா வருக

என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக

ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயரையுங் கிலியும்

கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்

சண்முகன் றீயும் தனியொளி வொவ்வும்
குண்டலி யாஞ் சிவ குகன்றினம் வருக

ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்

பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்

ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்

பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்

துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்

இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க

செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி

டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு

விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து

என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்

லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்

றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க

என்னுயிர்க் குயிராம் இறையவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க

அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க

கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க

நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க

கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க

மார்பை இரத்ந வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க

வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க

அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க

நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க

பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க

பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க

ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க

முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க

நாவில் சரஸ்வதி நல்துணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க

முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க

அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க

வரும்பகல் தன்னில் வச்ரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க

காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க

தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க, பார்க்க பாவம் பொடிபட

பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்

அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராக்ஷதரும்

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்பச் சேனையும்

எல்லிலும் இருட்டிலும் எதிர்படு மண்ணையும்
கனப்பூசை கொள்ளும் காளியோ டனைவரும்

விண்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளங்களும்

என்பெயர் சொலவும் இடிவிழுந் தோட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்

பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்

ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்

ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட

மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட

படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு

கட்டி உருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிக் கட்டு

முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற்செதி லாக

சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக

விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்

எலியுங் கரடியும் இனித்தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்

கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுட னிறங்க

ஒப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்

சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்வி ப்பிருதி

பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி

பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்

நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக

ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்

உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரஹண பவனே சையொளி பவனே

திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே

அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்

கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை

இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா

கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா

ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா

சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்

என்நா விருக்க யானுனைப் பாட
என்னைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனை

பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை

நேச முடன் யான் நெற்றியி லணிய
பாச வினைகள் பற்றது நீங்கி

உன்பதம் பெறவே உன் அருளாக
அன்புடன் இரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்

மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க

வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க

வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்

வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க

எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்தால்

பெற்றவன் நீகுரு பொறுப்புந்துன் கடனே
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே

பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தன் என்மீதுன் மனமகிழ்ந் தருளித்

தஞ்சமென் றடியர் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய

பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்

ஆசாரத் துடன் அங்கந் துலக்கி
நேசமுட னொரு நினைவது வாகிக்

கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்

ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய

அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலத ருளுவர்

மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோண் மகிழ்ந்து நன்மை யளித்திடும்

நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்

கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண வகையாய் விளங்கும்

விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்

நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி

அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்

சூரபத் மாவைத் துணித்தகை யதனல்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த

குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்ற

எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் மேலவ போற்றி

தேவர்கள் சேனு பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி

திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி

கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி

உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்

சரணம் சரணம் சரஹண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

உ

சிவமயம்.

வேலு மயிலுந் துணை.

# சத்ரு சங்கார வேற் பதிகம்.

---

## காப்பு.

சண்முகக் கடவுள் போற்றி சரவணத் துதித்தோய் போற்றி
கண்மணி முருகா போற்றி கார்த்திகை பாலா போற்றி
தண்மலர்க் கடப்பமாலை தாங்கிய தோளா போற்றி
விண்மதி வதனவள்ளி வேலவா போற்றி போற்றி.

அப்பமுடன் அதிரசம் பொரிகடலை துவரை வடை
அமுதுசெய் இபமுகவனும்
ஆதிகே சவனிலட் சுமி திங்கள் தினகரன்
அயிராவதம் வாழ்கவே
முப்பத்து முக்கோடி வானவர்களிடர் தீர
முழுது பொன்னுலகம் வாழ்க
மூவரொடு கருடகந் திருவர் கிம்புருடரும்
முது மறைக்கிழவர் வாழ்க
செப்பரிய இந்திரன் தேவிஅயி ராணிதன்
திருமங்கலம் வாழ்கவே
சித்த வித்தியாதரர் கின்னரர்கள் கனமான
தேவதைகள் முழுதும் வாழ்க
சப்தகலை விந்துக்கு மாதியாம் அதிரூப
சரஹணனை நம்பினவர்மேல்
தர்க்கமிட நாடினரைக் குத்தியெதி ராடிவிடுஞ்
சத்ருசங் கார வேலே. (1)

சித்தி சுந்தரி கௌரி அம்பிகை க்ருபாநிதி
சிதம்பரி சுதந்தரி பர
சிற்பரி சுமங்கலி நிதம்பரி விடம்பரி
சிலாசுத விலாச விமலி
குத்து திரிசூலி திரிகோணத்தி ஷட்கோண
குமரி கங்காளி ருத்ரி
குலிசவோ ங்காரி ரீங்காரி யாங்காரி யூங்
காரி ரீங்காரி யம்மா
முத்தி காந்தாமணி முக்குண துரந்தரி
மூவர்க்கு முதல்வி ஞான
முதுமறைக் கலைவாணி யற்புத புராதனி
மூவுலகு மானசோதி
சத்தி சங்கரி நீலி கமலி பார்வதி தரும்
சரஹணனை நம்பினவர்மேல்
தர்க்கமிட நாடினரைக்குத்தியெதி ராடிவிடுஞ்
சத்ரு சங்கார வேலே. (2)

மூரியுள முப்பத்து முக்கோடி தேவரும்
முனிவரொடும் அசுரர் கூடி
முழுமந்த்ர கிரிதன்னை மத்தாகவே செய்து
முற்கணத் தமுது பெறவே
கோரமுள வாசுகியி னுயிரம் பகுவாயில்
கொப்பளித்திடு விடங்கள்
கோளகையு மண்டலங்களியாவையு மெரித்திடுங்
கொடிய வாவினைப் பிடித்து
வீரமுடன் வாயினுற் குத்தி யுதிரம் பரவ
இருதாளிலே மிதித்து
விரித்துக் கொழுஞ்சிற கடித்தே யெடுத்துதறும்
விதமான தோகை மயிலில்
சரியாக தினமேறி விளையாடி வருமுருக
சரஹணனை நம்பினவர் மேல்
தர்க்கமிட நாடினரைக் குத்தியெதி ராடிவிடுஞ்
சத்ரு சங்கார வேலே. (3)

உக்ரமுள தாருகன் சிங்கமா சூரனும்
உன்னுதற் கரியசூரன்
உத்திகொளு மங்கிமுகல் பானுகோபன் முதல்
உத்தண்ட அசுரர் முடிகள்
நெக்குவிட கரிபுரவி தேர்கள் வெள்ளங்கோடி
நெடிய பாசங்கள் கோடி
நிறையிலா அஸ்திரம் வெகுகோடி கள் குருதி
நீரிற் சுழன் றலவவே
தொக்குதொகு திதிதிமி டுண்டுடுடு டகுடிகு
துந்துமித குகுதி திகுதை
தோததி மிடங்குகுகு டிங்குகுகு சங்குகென
தொந்தக் கவந்தமாட
சக்ரமொடு சத்திவிடு தணிகை சென்னியில் வாழுஞ்
சரஹணனை நம்பினவர் மேல்
தர்க்கமிட நாடினரைக் குத்தியெதி ராடிவிடுஞ்
சத்ரு சங்கார வேலே. (4)

அந்தியிற்பே யுச்சி யுறுமுனிக் காட்டேரி
அடங்காத பகலி ரிசியும்
அகோர கண்டங் கோர கண்ட சூன்யம் பில்லி
அஷ்டமோகினி பூதமும்
சந்தியானவ குட்டி சாத்தி வேதாளமுஞ்
சாகினி யிடாகினி களும்
சாமுண்டி பகவதி ரத்தகாட்டேரி முதல்
சஞ்சரித்திடு முனிகளும்
சிந்தை நொந்தலறி திரு வெண்ணீறு காணவே
தீயிலிடு மெழுகு போல
தேகமெல் லாங்கருகி நீருகவே நின்று
சென்னி யிரு தணிகை மலையில்
சந்ததங் கலியாண சாயுச்ய பத மருளுஞ்
சரஹணனை நம்பினவர்மேல்
தர்க்கமிட நாடினரைக் குத்தியெதி ராடிவிடுஞ்
சத்ரு சங்கார வேலே. (5)

கண்டவிட பித்தமும் வெப்புதலை வலியிருமல்
காமாலை சூலை குஷ்டம்
கண்டமாலைத் தொடை வாழைவாய்ப் புற்றிளெடு
கடினமாம் பெருவியாதி
அண்டொணுதச் சுரஞ் சீதவாதச் சுரம்
ஆருத பிளவை குன்மம்
அடங்காத விருபஃது மேகமூட னுலுலக்
கத்தி லெண் ணுயிரம்பேர்
கொண்டதொரு நோய்களும் வேலென் றுரைத்திடக்
கோவென்ன ஓலமிட்டு
குலவுதின கரன் முனம் மஞ்சுபோல் நீங்கிடுங்
குருபரன் நீறணிந்து
சண்டமாருத வால வுத்தண்ட கெம்பீர
சரஹணனை நம்பினவர்மேல்
தர்க்கமிட நாடினரைக் குத்தியெதி ராடிவிடுஞ்
சத்ரு சங்கார வேலே. (6)

மகமேரு உதயகிரி அஸ்தகிரியுஞ் சக்ர
வாளகிரி நிடதவிந்தம்
மாவுக்ர தரநர சிம்மகிரி யத்திகிரி
மலைகளொடு மதனசுமவா
ஜெகமெடுத் திடுபுட்ப தந்த மயிராவதம்
சீர்புண்டரீக குமுதம்
செப்புசா ருவபூம மஞ்சனம் சுப்பிர
தீபவாமன மாதிவா
சுகிமகாபதுமனு னந்தகார்க் கோடகன்
சொற்சங்க பாலகுளிகன்
தூயுதக்கன் பதும சேடனே டரவெலாம்
துடித்துப் பதைத் ததிரவே
தகதகென நடனமிடு மயிலேறி விளையாடுஞ்
சரஹணனை நம்பினவர் மேல்
தர்க்கமிட நாடினரைக் குத்தியெதி ராடிவிடுஞ்
சத்ரு சங்கார வேலே. (7)

திங்கள் பிரமாதியரும் இந்த்ராதி தேவருந்
தினகரரு முனிவரோடு
சித்ரபுத் திரர்மௌலி யகலாம லிருபதம்
சேவித்து நின்று தொழவும்
மங்கைதிரு வாணியும் அயிராணி யொடுசத்த
மாதரிரு தாள்பணியவும்
மகதேவர் செவிகூர பிரணவ முரைத்திட
மலர்ந்த செவ்வாய்க ளாறும்
கொங்கை களபம் புழுகு சவ்வாதும் அணிவள்ளி
குமரி தெய்வானை யுடனே
கோதண்டபாணியும் நான்முகனு மேபுகழ்
குலவு திருத் தணிகை மலைவாழ்
சங்கு சக்கர முனியும் பங்கயக் கரகுமர
சரஹணனை நம்பினவர்மேல்
தர்க்கமிட நாடினரைக் குத்தியெதி ராடிவிடுஞ்
சத்ரு சங்கார வேலே. (8)

மண்டலம் பதினலு லோகம் அசைந்திட
வாரிதியொ டேழும் வறள
வலியவ சுரர்முடிகள் பொடிபட்டக் கிரவுஞ்ச
மாரியெழ தூளியாகக்
கொண்டல்நிற மெனுமசுரர் அண்டங்க ளெங்குமே
கூட்டமிட் டேக வன்னோர்
குடல்கைகால் உடல்மூளை தலைகள் வெவ்வேருகத்
குத்திப் பிளந்தெ றிந்து
அண்டர்பணி கதிர்காமம் பழநி சுப்பிரமணிய
ஆவினன் குடி யேரகம்
அருணசலங் கைலை தணிகைமலை மீதில்உறை
அறுமுகப் பரம குருவாம்
சண்டமாருத கால சம்மார அதிவீர
சரஹணனை நம்பினவர்மேல்
தர்க்கமிட நாடினரைக் குத்தியெதி ராடிவிடுஞ்
சத்ரு சங்கார வேலே. (9)

மச்சங்குதித்து நவ மணிதழுவ வந்தநதி
வையாபுரிப் பொய்கையும்
மதியமுதத் தஞ்செயும் பொற்கோபுரத் தொளியும்
வான்மேவு கோயிலழகும்
உச்சிதம தான திரு வாவினன் குடியில்வாழ்
உம்பரிடர் முடிநாயக
உக்ரமயி லேறிவரு முருக சரஹணபவ
ஓங்கார சிற்சொருப வேள்
அச்சுத க்ருபாகர னைமுறை செய்யவே
ஆழியை விடுத்தானையை
அன்புடன் ரட்சித்த திருமால் முகுந்தனெனும்
அரிகிருஷ்ண ராமன் மருகன்
சச்சிதாநந்த பர மானந்த சுரர்தந்த
சரஹண்ணனை நம்பினவர் மேல்
தர்க்கமிட நாடினவர்க் குத்தியே தி[illegible]டுஞ்
சத்ரு சங்கார வேலே. (10)

---

திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உவப்பிலா ஒன்றே உணர்வுசூழ்
கடந்த தோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே சித்தத்துள்
தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே அம்பலம்
ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத் தொண்டனேன்
விளம்புமா விளம்பே.

---

# அகத்தியப் பஞ்சகம்.

---

குகனே வருக களங்க மிலாக் கோனே வருக கறைமிடற்றோன்
மகனே வருக மனம்பூத்த மலரே வருக ஓராறு
முகனே வருக சிவானந்த முதலே வருக அடியாரின்
அகனே வருக பழனிமலை அரசே வருக வருகவே. (1)

கந்தா சரணம் அயில்வேல் செங் கரனே சரணம் கார்மாரி
மைந்தா சரணம் செந்திருமால் மருகா சரணம் வறியேன் தன்
சிந்தா குலந்தீர்த் தருள் செய்யும் சேயே சரணம் எனைக் காக்கும்
எந்தாய் சரணம் பழனிமலை இறைவா சரணம் சரணமே (2)

சிவமே போற்றி சிற்சபையோன் செல்வா போற்றி கௌமா ரர்
தவமே போற்றி விண்ணுலகத் தலைவா போற்றி என்போல் வார்
பவமே ஒழிக்க வந்தருளும் பதியே போற்றி அந்நாளில்
அவமே பொடித்த பழனிமலை அண்ணா போற்றி போற்றியே (2)

நாதா தருக நலமெல்லாம் நண்பே தருக உனைவேண்ட
போதா தருக மெய்ஞ்ஞானம் புனிதா தருக கருணை பொறை
தாதா தருக கல்விகுணம் தயையே தருக கேட்டவெல்லாம்
ஈதா என்னும் பழனிமலை இறைவா தருக தருகவே (4)

கூர்வேல் வாழி தேவர் தொழும் குமரன்வாழி நடனமயில்
சீர்மன் வாழி வலனுயர்த்த சேவல்-வாழி வள்ளி தெய்வப்
பேர்மான் வாழி பேசரிய பெரியோர் வாழி செஞ்சாலி
ஆர்வண் பண்ணைப் பழனிமலை அப்பன் வாழி வாழியவே. (5)

முற்றிற்று.

---

## பெரியபுராணச் செய்யுள்

உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

---

சொல்லுவ் தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந் தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய்
[போற்றி
எல்லையில் இன்பவெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லை அம் பலத்துள் ஆடும் சேவடி போற்றி போற்றி.

---

## பட்டினத் தடிகள்

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய் கச்சி ஏகம்பனே. (1)

சொல்லால் வரும்குற்றம் சிந்தனையால் வரும் தோஷம் செய்த
பொல்லாத தீவினை பார்வையில் பாவங்கள் புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடும் தீங்குகள் ஆயவுமற்
றெல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே. (2)

வில்லால் அடிக்கச் செருப்பால் உதைக்க வெகுண்டொருவன்
கல்லால் எறியப் பிரம்பால் அடிக்கக் களிவண்டு கூர்ந்
தல்லார் பொழில்தில்லை அம்பலவாணர்க்கோ ரன்னைபிதா
இல்லாத தாலல்லவோ இறைவா கச்சி ஏகம்பனே. (3)

ஆயும் புகழ்த்தில்லை அம்பலவாணர் அருகில் சென்றால்
பாயும் இடபம் கடிக்கும் அரவம் பின்பற்றிச் சென்றால்
பேயும் கணமும் பெருந்தலைப் பூதமும் பின்தொடரும்
போயென் செய்வாய் மனமே பிணக்கா டவர் போம்இடமே. (4)

அத்தனை முப்பத்து முக்கோடி தேவர்க் கதி பதியை
நித்தனை அம்மை சிவகாம சுந்தரி நேசனை எம்
கர்த்தனைப் பொன்னம் பலத்தாடும் ஐயனைக் காணக் கண்கள்
எத்தனை கோடி யுகமோ தவஞ்செய் திருக்கின்றவே. (5)

PRINTED AT
VEST & CO., MOUNT ROAD,
MADRAS.

# ருத்ராக்ஷம்

ஜெபத்துக்கு உபயோகிக்கத் தகுதியானதும், யாகக் கோர்த்து அணிந்துகொள்ளக் கூடியதும சிறிய சயிஸ் ருத்ராக்ஷம் மாலை 1-க்கு 108-மணிகள் கோர்க்கப்பட்டிருக்கும். மாலை 1-க்கு விலை அணா 6, 8, 10, 12, ரூ. 1, 1-8, முதல் 15 வரை.

கழுத்தில் மாலையாகப் போட்டுக் கொள்ளக்கூடியதும் தனி மணியாகக் கழுத்தில் அணிந்துகொள்ளக் கூடியதுமான பெரிய சயிஸ் உள்ளதும், 5முகம் உள்ளதும் 32-மணிகள் கோர்த்த மாலை 1-க்கு அணா 8 முதல் ரூ. 25 வரை.

ஆறுமுகமுள்ள பெரிய சயிஸ் உள்ள 32-மணிகள் கோர்த்த மாலை 1-க்கு ரூ. 1 முதல் 25 வரை.

இன்னும் எங்களிடம் அநேக விதமான
ருத்ராக்ஷங்களும் கிடைக்கும்.

---

## காசி வயிரவர் கயிறு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கெ. கயிறு | 100-க்கு | ரூ. | 3 | 0 | 0 |
| 2 கெ. ,, | ,, | ,, | 2 | 8 | 0 |
| 3 கெ. ,, | ,, | ,, | 2 | 0 | 0 |

கழுத்தில் கட்டுகிற கயிறு 1-க்கு அணா 2, 4.

---

## கறுப்புக் காயம்

கலப்பற்றது உயர்ந்த தினுசு தோலா 1-க்கு அணா 6.

விலாசம் :—

**கே. எஸ். முத்தையா & கோ.,**

சில்க் ஹவுஸ்,

காசி.

...து நாட்டின் தற்கால வறுமையும்,
...மையும் நீங்கிப் பெருமை அடையுமாறு,
...ங்கும் லக்ஷ்மியைப் பூஜை செய்யுங்கள். எங்கள்

# “லக்ஷ்மி”

என்ற மாதப் பத்திரிகையை எல்லோரும் ஆதரியுங்கள்.

எங்கள் “லக்ஷ்மி” சித்திரப் படங்களுடன் கூடிய பத்திரிகை.

சிறந்த தமிழ் அறிஞர்கள் ‘லக்ஷ்மி’யில் வியாசங்கள் எழுதுகிறார்கள்.

எல்லோரும் விரும்பும் பல நல் விஷயங்கள் லக்ஷ்மியில் வெளி வருகின்றன.

உங்கள் வீட்டிற்கு நமது லக்ஷ்மியை வரவழையுங்கள்.

உங்கள் வீட்டில் எல்லோரும் லக்ஷ்மியை விரும்பு வார்கள்.

லக்ஷ்மி உங்களைத் தேடி வருகின்றாள்.
அவளை அன்புடன் எதிர்கொண் டழையுங்கள்.

மாதிரிப் பிரதி இரண்டணா. மாதிரிப் பிரதியைப் பார்வையிட்ட பின் நீங்கள் சந்தாதாராவது நிச்சயம்.

உங்களுக்கு லக்ஷ்மி கடாக்ஷம் உண்டாவதாக!

| | | |
|---|---|---|
| வருட சந்தா உள் நாடு | ரூ. | 2 0 0 |
| வெளி நாட்டிற்கு | ,, | 2 8 0 |

விலாசம்:—

மானேஜர்,

“லக்ஷ்மி” ஆபீஸ்,

தபால் பெட்டி 99, மதராஸ்.

Printed at Vest & Co., Mount Road, Madras.